Under Section 173 BNSS

FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313233

1. District : DVAC, Chennai PS: CC-1 Year: 2026 FIR No.: 06 Date: 12.08.2026
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended 2018) Sections பிரிவுகள்: 7, 8 & 9
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106 BNSS (102 CrPC)
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 11.08.26 Date to : 11.08.26
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
   Time Period : Time from : 19.30 hrs Time to : 23.30 hrs
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 12.08.26 Time : 11.00 hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) Time : 12.08.26 on Registration of FIR
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 9.6 km. North
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : (b) Address : எருகுகம்பாக்கம் ஊராட்சி தணைவர் அலுவலகம்
   முறைக் காவல் எண் முகவரி 4/123, சங்கரலிங்கனார், எருமை எருகுகம்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : A. இமயவரம்பன் (b) Father's/ Husband's Name : நான சேகர்.
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : Place of Issue : காவலர் தணை தன்காணிப்பாளர் சென்னை நகர பாகம் - I
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : (g) Address : உள்துறை பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு தணை சென்னை - 16
   தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Tmt. S. ஜெகதீஸ்வரி, எருகுகம்பாக்கம் ஊராட்சி மன்ற தணைவர்
   2) Tr. நாகேஸ்வரன், AGM-IT & Admn, M/s VGN Homes Pvt Ltd,
   3) Tr. ஜெயசந்திரன், -do , 4) Tr. காமேஸ்குமார், -do .
   5) M/s VGN Homes Pvt Ltd, 333, Poonamallee High Road, Amaindakarai ch-34
   மற்றும் 6) ஊராட்சி மன்ற உறுப்பினர்கள்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant :
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   : இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .....காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

DEPUTY SUPDT. OF POLICE
Vigilance and Anti - Corruption
Chennai - City - I Dett,
Chennai - 16.

15. Date & Time of despatch to the court: 12.05.2026
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் .....

Rank: நிலை .....No. எண் .....

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர பிரிவு -I குற்ற எண்.6/2026, பிரிவு-7, 8 & 9 ஊழல் தடுப்புச் சட்டம் 1988 (2018) -ல் திருத்தப்பட்டது மற்றும் BNSS பிரிவு 106 (Cr.P.C 102) வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்-12 -ன் தொடர்ச்சி பின்வருமாறு.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர பிரிவு -I காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் 11.08.2021 -ம் தேதி செவ்வாய்கிழமை பிற்பகல் 19.30 மணி முதல் 23.30 மணி வரையில் காஞ்சிபுரம் மாவட்டம், கெருகம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 12.08.2026 -ம் தேதி மதியம் 12.30 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர பிரிவு -I குற்ற எண் 6/AC/2026/CC-I, u/s 7, 8 & 9, Prevention of Corruption Act, 1988 as amended in 2018 & B.N.S.S Section 106 (Cr.P.C102) -ன்படி பதிவு செய்யப்பட்ட வழக்கின் விபரம் பின்வருமாறு:- இன்று 11.08.2026 -ம் தேதி செவ்வாய்கிழமை மாலை 19.30 மணிக்கு காஞ்சிபுரம் மாவட்டம், கெருகம்பாக்கம் ஊராட்சி அலுவலகத்தில் வைத்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர பிரிவு -I, காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களால் தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை :-

01.	திரு.A.இம்மானுவேல் ஞான சேகர், காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகர பிரிவு -I, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை -16.
02.	திருமதி.P.I.ஜோஸ்லீன் மேரி, காவல் ஆய்வாளர், சென்னை நகர பிரிவு -I, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை -16.

03.	திருமதி,V.செல்வி, காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை-16.
04.	திருமதி.M.பிரியா, காவல் ஆய்வாளர், சென்னை நகர பிரிவு -I, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை -16.

காஞ்சிபுரம் மாவட்டம், கெருகம்பாக்கம் ஊராட்சி அலுவலகத்தில் ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் ஊராட்சி உறுப்பினர்கள் இணைந்து மனை பிரிவு ஒப்புதல் வழங்குவதற்காக கட்டுமான நிறுவனங்களிடமிருந்து பணம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின்பேரில், இன்று (11.08.2026) -ம் தேதி 17.30 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் அவரது அலுவலக தொலைபேசியில் இருந்து அரசு சாட்சிகளுக்கு தகவல் தெரிவித்ததின் பேரில், மேற்படி அரசு சாட்சிகளான 1) திரு.V.G.கணேசன், ஆ/வயது 55/2026, த/பெ.கோபால், கண்காணிப்பாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், மீனம்பாக்கம், சென்னை -16, 2) திரு.S.விஷால், ஆ/வயது 30/2026, த/பெ.சுப்பிரமணி, உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், மீனம்பாக்கம், சென்னை -16 ஆகியோர் 17.00 மணிக்கு சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர பிரிவு -I, காவல் துணை கண்காணிப்பாளராகிய என்னிடம் அறிக்கை செய்தனர். பின்னர் மேற்படி அரசு சாட்சிகள், சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர பிரிவு -I, காவல் ஆய்வாளர்கள் மற்றும் குழுவுடன் 18.30 மணிக்கு இரண்டு அர்சு வாகனங்களில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர பிரிவு -I அலுவலகத்திலிருந்து புறப்பட்டு கெருகம்பாக்கம் ஊராட்சி தலைவர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 19.30 மணிக்கு வந்தடைந்தோம். மேற்படி அலுவலகமானது சங்கரலிங்கனார் தெரு சாலையில் எண் 1/123 என்கிற முகவரியில் வடக்கு புறமாக

அமைந்துள்ளது. இவ்வலுலக வெளிபுற நுழைவாயில் மேற்குமுகம் பார்த்தவாறும், பஞ்சாயத்து தலைவர் அலுவலகத்தின் அருகில் நூலகமும், கிழக்கு புறமாக அலுவலக கலந்தாய்வு கூடமும் அமைந்துள்ளது. ஊராட்சிமன்ற தலைவர் அலுவலகத்திற்கு உள்ளே நுழைந்த போது ஊராட்சிமன்ற தலைவர் திருமதி.S. ஜெகதீஷ்வரி அவரது அறையின் இருக்கையில் வடக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்தார். அவரது அலுவலக அறையில் இருந்த நாற்காலிகளில் முன்று நபர்கள் அமர்ந்து மேற்படி ஊராட்சிமன்ற தலைவரிடம் பேசி கொண்டிருந்தார்கள். அப்போது நான் அவரது அறையில் நுழைந்து ஊராட்சிமன்ற தலைவரிடம் நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, காவல் துணை கண்காணிப்பாளர் என்றும், என்னுடன் வந்திருந்த மேற்படி இரண்டு அரசு சாட்சிகளான திரு.V.G.கணேசன், திரு.S.விஷால், காவல் ஆய்வாளர்கள் மற்றும் காவல் ஆளிநர்களையும் அறிமுகப்படுத்தி வைத்து அனைவரது அடையாள அட்டையை காண்பித்து, அவரவர்களை அவர் முன்பு சுயபரிசோதனை செய்தும் காண்பிக்கப்பட்டது. பின்னர் மேற்படி ஊராட்சிமன்ற தலைவர் அவர்களை விசாரிக்க, அவர் தனது பெயர் S.ஜெகதீஷ்வரி என்றும், கெருகம்பாக்கம் ஊராட்சி மன்றத்தில் தலைவர் என்று கூறினார். அந்த அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்திருப்பதாக தகவல் தெரிவித்து, அதன் பிறகு அரசு சாட்சிகள் முன்னிலையில் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. அவருடைய அறையை சோதனை செய்த போது அவர் அமர்ந்திருந்த இருக்கையின் மேஜையின் மீது GRT Jewellers Since 1964 என்று அச்சிடப்பட்ட நீலநிற கைப்பை ஒன்று இருந்தது. அந்த கைப்பையை எடுத்து அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்த போது அதில் கட்டுக்கட்டாக பணம் மூன்று பச்சை நிற Max Size Courier கவர்களில் காணப்பட்டது. அந்த பச்சை நிற கவ்ர்களை வெளியில் எடுத்து அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்த போது முதல் கவரினுள் Rs.500 X 1000 = Rs.5,00,000, முதல் கவரின் மேலே சிகப்பு பேனாவால் சிறியதாக 5 என்றும், இரண்டாவது கவரினுள் Rs.500 X 1000 = Rs.5,00,000, அதன் கவரின் மேலே சிகப்பு பேனாவால் சிறியதாக 5 என்றும், மற்றும்

மூன்றாவது கவரினுள் 500 X 800 = Rs.4,00,000/- அதன் கவரின் மேலே சிகப்பு பேனாவால் சிறியதாக 4.25 என்றும் எழுதப்பட்டிருந்தது ஆக மொத்தம் ரூ.14,00,000/- இருந்தது. மேலும் எண்ணிபார்க்கும் போது கவரின் மேல் 4.25 ஆனால் கவரினுள் ரூ.4,00,000/- மட்டுமே இருக்கிறது. மீதமுள்ள ரூ.25,000/- குறித்து விசாரித்து போது, அங்கு அமர்ந்திருந்த VGN நிறுவன ஊழியர் திரு.ராஜேஷ்வரன் அவர்கள் தான் அணிந்திருந்த பேண்ட் பாக்கெட்டில் ரூ.25,000/- (Rs.500 X50 = Rs.25,000/-) இருப்பதாக கூறி எடுத்து ஆஜர் செய்தார். மேற்குறிப்பிட்ட ரூ.14,25,000/- அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திருமதி.S.ஜெகதீஷ்வரி, ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் மேசை மீது இருந்த ரூபாய் 14,00,000/-குறித்து அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரித்த போது, அந்த பணம் தன் இருக்கையின் மீது எப்படி வந்தது என்று தனக்கு தெரியாது என்றும், மேலும் அங்கு வந்திருந்த VGN நிறுவனத்தை சார்ந்த நபர்கள் திருமண செலவிற்காக கொண்டு வந்ததாகவும், முன்னுக்கு பின் முரணாக விளக்கம் கூறியதால், அந்த பணம் லஞ்ச பணம் என்றும், மேற்சொன்ன மனைபிரிவு மற்றும் Tamil Nadu Real Estate Regulation Act (TNRERA) பெறுவதற்காக, ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.S.ஜெகதீஸ்வரி அவர்களுக்கு கையூட்டாக கொடுக்க வந்த பணம் என்கிற சந்தேகத்தின் பேரில் அரசு சாட்சிகள் முன்னிலையில் மேற்படி ரூ.14,25,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் ஊராட்சி மன்ற தலைவர் அவர்கள் வைத்திருந்த Hand Bag-ல் (Rs.500 X 44 & 100 X 1 = ரூபாய் 22,100/- என வைக்கப்பட்டிருந்த ரூபாய் நோட்டுக்களின் கட்டின் மேலே Legrand Live the advanture Estimate Memo Pad என்று அச்சிடப்பட்ட துண்டு ரசீது பேப்பரில் 34650, 42000, 50000, 50000, 44250 மொத்தம் 2,20,900/-. மேலும் 40887, 49560, 59000,59000,52215 என்றும் எழுதியிருந்தது. அதன் கீழ் 10% 22100 என்று Blue colour பேனாவில் எழுதப்பட்டிருந்த துண்டு சீட்டு மடித்து வைக்கப்பட்டிருந்தது. மேலும் அதை தவிர அவருடைய Hand Bag -ல் தனியாக Rs.500 X 11= Rs.5,500/-, Rs.46

X 100 = Rs.4,600/- இருந்தது. ஆக மொத்தம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களிடம் வைத்திருந்த கணக்கில் வராத பணம் ரூ. 32,200/- குறித்து விசாரித்த போது அவர் கூறிய விளக்கத்தில் போதிய உண்மைதன்மை இல்லாத காரணத்தினால், அந்த பணம் லஞ்ச பணமாக இருக்கக்கூடும் என்று சந்தேகிக்கப்பட்டு அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் பிறகு அவரது அறை முழுவதும் சோதனை செய்து பார்க்கப்பட்டது. பிறகு அவரது அறையினுள் அமர்ந்திருந்த மூன்று நபர்கள் பற்றி விசாரிக்க அவர்கள் VGN நிறுவனத்தில் பணிபுரியும் திரு.ராஜேஷ்வரன் திரு.A.ஜெய்சந்திரன் மற்றும் திரு. காமேஷ்குமார் என விசாரிக்கும் போது தெரியவந்தது. திரு.ராஜேஷ்வரன் என்பவர் VGN நிறுவனத்தில் Admin Manager -ஆக ஐந்து வருடங்களாக பணிபுரிந்து வருவதாகவும், திரு.A.ஜெய்சந்திரன் என்பவரை விசாரித்த போது தான் VGN Homes Private Limited என்ற நிறுவனத்தில் AGM -IT and Administration -ஆக பணிபுரிவதாகவும் மற்றும் திரு. காமேஷ்குமார் என்பவரை விசாரித்த போது தான் VGN Homes Private Limited என்ற நிறுவனத்தில் IT Admin -ஆகியோர்களும் பணிபுரிவதாக தெரிவித்தார்கள். எதற்காக ஊராட்சி மன்ற தலைவர் அலுவலகத்திற்கு வந்தீர்கள் என்று கேட்ட போது, அவர்கள் மூவரும் 27.07.2026 -ம் தேதியன்று குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குட்பட்ட சர்வே எண்கள் 744/2A2pt, 746/1pt, 747pt, 748pt மற்றும் 749/1pt, அடங்கிய 424894 சதுர அடிக்கு M/s.VGN Builders Private Limited என்கிற நிறுவனத்தின் பெயருக்கு CMDA உறுப்பினர் செயலர் அவர்களிடமிருந்து ஒப்புதல் தீர்மான நகல் பெற வந்ததாக தெரிவித்தனர். மேலும் ஒப்புதல் அளித்த உண்மை நகல் மற்றும் மனை பிரிவு ஒப்புதல் கடிதமும் இன்று தலைவர்/நிர்வாக அலுவலர் திருமதி.S.ஜெகதீஷ்வரி அவர்கள் வழங்குவதாக கூறியதால், அதை பெற்று செல்ல வந்ததாக தெரிவித்தார்கள். மற்றொரு இரண்டு நபர்களான திரு.A.ஜெய்சந்திரன் என்பவரை சோதனை செய்த போது அவரிடம் எந்த பணமும் இல்லை. திரு.காமேஷ்குமார் என்பவர் அணிந்திருந்த பேண்ட் பாக்கெட்டில் ரூ.2,290/- இருந்தது.

அந்த பணம் குறித்து விசாரித்த போது, அவர் தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததின் பேரில், அவர் கூறிய காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் ஊராட்சி மன்ற தலைவர் அலுவலக அறையின் வலது புறமாக இருந்த ஊராட்சி மன்ற செயலர் அவர்களது அறையை சோதனை செய்த் போது அங்கு இருந்த திருமதி.S.லைலா என்பவரை விசாரித்த போது தான் கெருகம்பாக்கம் ஊராட்சி மன்ற துணை தலைவர் என்றும் தான் நான்கரை வருடங்களாக பதவி வகிப்பதாக தெரிவித்தார். பின்னர் அவரது இருக்கை மற்றும் அலுவலக அறையில் இருந்த மற்ற மேஜைகளை சோதனை செய்த போது பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை. அவர் அருகில் இருந்த திருமதி.உஷா என்பவரை விசாரித்த போது தான் கெருகம்பாக்கம் ஊராட்சி மன்றத்தில் வார்டு உறுப்பினராக பதவி வகித்து வருவதாக தெரிவித்தார். பின்னர் அவரது இருக்கை மற்றும் அலுவலக அறையில் இருந்த மற்ற மேஜைகளை சோதனை செய்த போது பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேலும் ஊராட்சி மன்ற செயலர் குறித்து விசாரித்த போது அவர் பெயர் திரு.தணிகாச்சலம் என்றும், அவர் பணி முடித்து வீட்டிற்கு சென்றுவிட்டதாக தெரிவித்தனர். பின்னர் திரு.தணிகாச்சலம் அவரது செல்பேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு, ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு வருமாறு தகவல் தெரிவிக்கப்பட்டதின் பேரில், அவர் ஊராட்சி மன்ற தலைவர் அலுவலகத்திற்கு சுமார் 21.00 மணியளவில் வந்தடைந்தார். பின்னர் குன்றத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலரான திருமதி. கலைசெல்வி அவரது செல்பேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு, ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு வருமாறு தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவர் தாமதாமாக 22.40 மணிக்கு ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு வந்தடைந்தார். மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலருக்கு இன்று நடத்திய திடீர் சோதனையின் விவரம் தெரிவிக்கப்பட்டது. மேலும் ஊராட்சி மன்ற தலைவர் அலுவலகத்திற்கு வந்த ஊராட்சி மன்ற செயலர் திரு.தணிக்காச்சலம் அவர்களை விசாரித்த போது, அவர் இன்று தீர்மானம் எதுவும்

நிறைவேற்றப்படவில்லை. VGN நிறுவனத்திற்கு மனை பிரிவு ஒப்புதல் ஆணை வழங்கப்பட்டது என்றும் அதற்கான உண்மை நகல் எடுத்து ஆஜர் செய்ய சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அதனுடைய அசல் ஒன்றை VGN நிறுவனத்தில் இருந்து வந்திருந்த திரு.ஜெய்சந்திரன் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் அலுவலகத்தில் காணப்பட்ட ஆவணங்களின் விவரம் பின்வருமாறு:-

Sl. No.	Description of the document	No.of Sheets
1.	கெருகம்பாக்கம் ஊராட்சி சு.ஜெகதீஸ்வரி, D.M.E., சுந்தரேசன், M.Com., தலைவர்/செயல் அலுவலர், பெறுநர்: ரியல் எஸ்டேட் ஒழுங்கு முறை ஆணையம், எண் 133, G-Block, முதல் அவின்யூ, அண்ணா நகர் கிழக்கு, சென்னை -600 102, நாள்: 11.08.2026 என்பவருக்கு வழங்கிய அசல் ஒப்புதல் கடிதம். (Original)	One sheet
2.	A copy of Chennai Metropolitan Development Authority (CMDA) Thalamuthu Natarajan Building, No.1, Gandhi Irwin Road, Chennai Approved letter file no.CMDA/PP/Layout-1/0068/2026, dated:15.07.2026.	3 sheets
3.	Attested copy of layout calculation total extent 39474 Sq.M Road area 12301Sq.m, Plotable area 27173sq.m.	One sheet
4.	Attested copy of Kundrathur Panchayat Union Layout of House sites in Survey No. 744/2A2pt, 746/1pt, 747pt, 748pt and 749/1pt of Gerugambakkam Village	One sheet
5.	Attested copy of தீர்மான நகல் குன்றத்தூர் ஊராட்சிஒன்றியத்தை சேர்ந்த கெருகம்பாக்கம் ஊராட்சியில் 27.07.2026 தேதியன்று முற்பகல்/பிற்பகல் 11.00 மணிக்கு ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.ஜெகதீஸ்வரி சுந்தரேசன், DME அவர்கள் தலைமையில் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்பு கூட்டத்தின் தீர்மான நகல் பொருள் 6, தீர்மானம் 18.	One sheet
6.	Attested copy of From P.Ponnaiah, IAS., Commissioner of Rural Development and Panchayat Raj, Panagal Building, Saidapet, Chennai -15 addressed to the District Collectors, All District Rc.No.4870/2024/PRI.MIS-1, dated:16.05.2025.	5 sheets
7.	Attested copy of Legrand Live the advanture Estimate Memo Pad என்று அச்சிடப்பட்ட துண்டு ரசீது.	One sheet

8.	Attested cvopy of கெருகம்பாக்கம் ஊராட்சி பணியாளர் வருகை பதிவேடு 2026-2027.	5 Sheets
9.	Attested copy of தீர்மான புத்தகம் கெருகம்பாக்கம் ஊராட்சி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், (இ) படப்பை	3 Sheets

மேலும் மேற்சொன்ன அலுவலகத்தில் காணப்பட்ட ஆவணங்களில் திரு.தணிக்காச்சலம், ஊராட்சி மன்ற செயலர் அவர்களின் சான்றொப்பம் பெற்று, அதில் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் மற்றும் அரசு சாட்சிகள் சுருக்கொப்பம் செய்து, விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.ஜெகதீஷ்வரி, மற்றும் VGN நிறுவனத்தை சார்ந்த திரு.ராஜேஷ்வரன், திரு.ஜெய்சந்திரன், திரு. காமேஷ்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து ஊராட்சி மன்ற அலுவலகத்தில் இருந்த திருமதி.லைலா, துணை தலைவர், திருமதி.உஷா, வார்டு உறுப்பினர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் இன்று கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கெரும்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் அலுவலகத்தை சோதனை செய்த போது கணக்கில் காட்டப்படாத தொகை ரூ.14,57,200/- ஊராட்சி மன்ற தலைவர் அறையில் இருந்தும், ஊராட்சி மன்ற தலைவரை சந்திக்க வந்த ரியல் எஸ்டேட் நிறுவனத்தினரிடமிருந்தும் மேற்சொன்ன ரூ.14,57,200/-தொகையை லஞ்சபணமாக இருக்கக்கூடும் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் கூட்டாய்வு இன்று 11.08.2026 -ம் தேதி மாலை சுமார் 19.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு சுமார் 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த கூட்டுத்தணிக்கையின்போது அலுவலக பணிகளுக்கோ, பொது மக்களுக்கோ, உடமைகளுக்கோ எவ்வித பாதிப்புமின்றி உரிய முறையில் முடிக்கப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர பிரிவு -I அலுவலகத்திலிருந்து கொண்டு வரப்பட்ட மடிக்கணினியில் தட்டச்சு

செய்யப்பட்டது. (ஒப்பம்/-XXX) 11.08.2026 (V.G.கணேசன்) கண்காணிப்பாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், மீனம்பாக்கம், சென்னை -16, (ஒப்பம்/-XXX) 11.08.2026 (S.விஷால்) உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், மீனம்பாக்கம், சென்னை -16, (ஒப்பம்/-XXX) 11.08.2026 (திருமதி.P.I.ஜோஸ்லீன் மேரி), காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊ.த.க.துறை, சென்னை-16, (ஒப்பம்/-XXX) 11.08.2026 (V.செல்வி) காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊ.த.கதுறை, சென்னை-16, (ஒப்பம்/-XXX) 11.08.2026 (M.பிரியா), காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊ.த.கதுறை, சென்னை-16, (ஒப்பம்/-XXX) 11.08.2026 (திரு.A.இம்மானுவேல் ஞான சேகர்), காவல் துணைக் கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-I ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16, (ஒப்பம்/-XXX) 11.08.2026 (சு.ஜெகதீஷ்வரி), க/பெ.சுந்தரேசன், தலைவர்/நிர்வாக அலுவலர், கெருகம்பாக்கம் ஊராட்சி, குன்றத்தூர் ஊர்ாட்சி ஒன்றியம் (இ) படப்பை, காஞ்சிபுரம் மாவட்டம், ஒப்பம்/-XXX) 11.08.2026 (P.தணிகாச்சலம்), ஊராட்சி செயலர், கெருகம்பாக்கம் ஊராட்சி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் (இ) படப்பை, காஞ்சிபுரம் மாவட்டம். மேலும் இந்த திடீர் சோதனையின் முடிவில் கெருகம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.S.ஜெகதீஸ்வரி அவர்களிடமிருந்து கைப்பற்ற கண்கில் வராமை பணம் ரூ.14,57,200/- த்தை குறித்து கேட்ட போது அவர்களால் திருப்திகரமான விளக்கம் தர இயலவில்லை. மேலும் கெருகம்பாக்கம் ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள், இதனை தொடர்ந்து திடீர் சோதனையின் போது கெருகம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களது அறையில் இருந்த VGN நிறுவனத்தில் பணிபுரியும் திரு.ராஜேஷ்வரன், Admin Manager, திரு.A.ஜெய்சந்திரன், AGM -IT and Administration மற்றும் திரு. காமேஷ்குமார், IT Admin ஆகியோர்கள் ஏற்கனவே 27.07.2026 -ம் தேதியன்று குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குட்பட்ட சர்வே எண்கள் 744/2A2pt, 746/1pt, 747pt, 748pt மற்றும் 749/1pt, அடங்கிய 424894 சதுர அடிக்கு M/s.VGN Builders Private Limited என்கிற நிறுவனத்தின்

பெயருக்கு CMDA உறுப்பினர் செயலர் அவர்களிடமிருந்து ஒப்புதல் தீர்மான நகல் வழங்க, கெருகம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் கூட்டாக சேர்ந்து ரூ.20,00,000/- மேற்படி M/s.VGN Builders Private Limited-ல் பணிபுரியும் மூவரிடமும் லஞ்சமாக கேட்டுள்ளனர். மேலும் திடீர் சோதனையின் போது ஊராட்சி மன்ற தலைவர் அறையில், ஊராட்சி மன்ற தலைவர் கையூட்டாக கேட்ட லஞ்ச பணத்தை கையில் வைத்திருந்தனர். மேலும், இவ்வழக்கின் திடீர் சோதனை மற்றும் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது VGN Homes Private Limited நிறுவனத்தில் Admin Manager -ஆக பணிபுரியும் திரு.ராஜேஷ்வரன், AGM-IT and Administration ஆக பணிபுரியும் திரு.ஜெயசந்திரன் மற்றும் IT Admin ஆக பணிபுரியும் திரு.காமேஷ்குமார் ஆகிய மூவரும் M/s.VGN Homes Privated Limited நிறுவனத்தின் சார்பில், Survey Nos. 744/2A2pt, 746/1pt, 747pt, 748pt மற்றும் 749/1pt, ஆகியவற்றை உள்ளடக்கிய மனைப்பிரிவு தொடர்பான ஒப்புதல் தீர்மான நகலை பெறுவதற்காக கெருகம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் அலுவலகத்திற்கு வந்திருந்தது விசாரணையில் தெரியவந்துள்ளது. திடீர் சோதனையின் போது மேற்கண்ட மூவரும் ஊராட்சி மன்ற தலைவர் அறையில் இருந்ததும், அவர்களிடம் விசாரணை மேற்கொண்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதும் தெரியவந்துள்ளது. மேலும் ஊராட்சி மன்ற தலைவர் அறையில் இருந்து கைப்பற்றப்பட்ட ரூ.14,25,000/- மேற்கண்ட மனைப்பிரிவு ஒப்பதலை வழுங்குவதற்காக பெறப்பட்ட லஞ்ச பணமாக இருக்கக்கூடும் என சந்தேகிக்கப்படுகிறது. மேலும், மேற்கண்ட மூவரும் VGN Homes Private Limited நிறுவனத்தின் சார்பில் மனைப்பிரிவு ஒப்புதல் தொடர்பாக ஊராட்சி மன்ற தலைவரை சந்திருந்ததும், மேற்கண்ட மனைப்பிரிவு ஒப்புதலுக்காக ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் இணைந்து ரூ.20,00,000/- லஞ்சமாக கேட்டதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. எனவே திரு.ராஜேஷ்வரன், AGM-IT and Administration ஆக பணிபுரியும் திரு.ஜெயசந்திரன் மற்றும் IT Admin ஆக

பணிபுரியும் திரு.காமேஷ்குமார் ஆகிய மூவரும் மேற்கண்ட லஞ்ச தொகையை வழங்க முன்வருதல், ஏற்பாடு செய்தல் ஆகிய செயல்களில் தொடர்புடையவர்களாக இருப்பது முதற்கட்ட விசாரணையில் தெரியவருவதால் அவர்களது தனிப்பட்ட பங்கு மற்றும் உடந்தை குறித்து மேலதிக விசாரணை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட மூவரையும் இவ்வழக்கில் குற்றச்சாட்டப்பட்டவர்களாக சேர்க்கப்படுகிறது. மேலும் அவர்கள் பணிபுரியும் M/s VGN Homes Private Limited, No.333, Poonamallee High Road, Aminjikarai, Chennai -600030. எனவே, திருமதி.S. ஜெகதீஸ்வரி, கெருகம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர், கெருகம்பாக்கம் ஊராட்சி மன்றம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் தனது பதவியை துஷ்பிரயோகம் செய்து கையூட்டாக பெற்றிருக்கக்கூடும் என்பதற்காக போதுமான முகாந்திரம் இருப்பதால் இன்று 12.08.2026 -ம் தேதி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர பிரிவு -I குற்ற எண் 6/AC/2026/CC-I, u/s 7, 8 & 9, Prevention of Corruption Act, 1988 as amended in 2018 & B.N.S.S Section 106 (Cr.P.C102) -ன்படி 1) திருமதி.S.ஜெகதீஸ்வரி, கெருகம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர், கெருகம்பாக்கம் ஊராட்சி மன்றம், 2) திரு.ராஜேஷ்வரன், AGM-IT and Administration, M/s VGN Homes Private Limited, No.333, Poonamallee High Road, Amaindakarai, Chennai -600 030 3) திரு.A.ஜெயசந்திரன், AGM-IT and Administration, M/s VGN Homes Private Limited, No.333, Poonamallee High Road, Amaindakarai, Chennai -600 030 4) திரு.காமேஷ்குமார், IT Admin, M/s VGN Homes Private Limited, No.333, Poonamallee High Road, Amaindakarai, Chennai -600 030 5) M/s VGN Homes Private Limited, No.333, Poonamallee High Road, Amaindakarai, Chennai -600 030 மற்றும் 6) ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், கெருகம்பாக்கம் ஊராட்சி மன்றம் ஆகியோர்கள் மீது முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டது. அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் திடீர் சோதனையின் போது தயார் செய்யப்பட்ட அனைத்து செயல்முறை நடவடிக்கைகளின் அசல் ஆகியவற்றை

கனம். முதன்மை மாவட்ட நீதிபதி, காஞ்சிபுரம் மாவட்டம் நீதிமன்றம் அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

(A.இம்மானுவேல் ஞான சேகர்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
சென்னை நகர பிரிவு -I,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை,
சென்னை -16.

DEPUTY SUPDT. OF POLICE
Vigilance and Anti - Corruption
Chennai - City - I Dett,
Chennai - 16.